திரு. ஜேம்ஸ் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

(இ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு.

THIRU MANALI C. KANDASWAMY : Sir, I move—

"That leave be granted for the introduction of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill 1972."

The motion was duly seconded.

The motion was put and carried and leave was granted.

THIRU MANALI C. KANDASWAMY : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

(ஈ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள்—சிறு இனும்கள் (ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவு.

திரு. ஆ. கு. சுப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, 1972-ம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் சிறு இனும்கள் (ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் முறையாக வழிமொழியப்பட்டது.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

திரு. ஆ. கு. சுப்பையா : இச் சட்டமுன்வடிவுவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப் படுகிறது.

(ii) தனித் தீர்மானம்—தொடர்ச்சி.

கைத்தறித் துறைக்குப் பாதுகாப்பளித்தல்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 9—12—1971-ம் நாளன்று முன்னு வைக்கப்பட்டு விவாதித்த தீர்மானத்தின்மீது இப்பொழுது விவாதம் தொடரும்.